கழக வெளியீடு—௫௦௪

சிறுகதை விருந்து

மலர் 1

திருவாளர்: K. அப்பாதுரை பிள்ளை அவர்கள், M.A., L.T.,
எழுதியது.

திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.
திருநெல்வேலி & சென்னை

பொருளடக்கம்

சிறுகதை விருந்து

மலர்—1

1. பிறைக்கொழுந்தின் பிறந்த நாள்

பிறைக் கொழுந்திற்கும் பிறந்த நாள் களுக்கும் என்னவோ பொருத்தக் குறைவு என்றுதான் கூறவேண்டும். ஐந்தா மாண்டுக்கு முந்திய பிறந்த நாட்கள் அவள் நினைவுக்கு எட்டவில்லை. ஐந்தா மாண்டிலோ பிறந்த நாள் விழாவிற்காக ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார்கள். அந் நாளைக்கு ஒரு நாள் முன்னதாகத்தான் தம்பி தில்லை இறந்து போனான். அடுத்த ஆண்டு உலகப்போர் நடக்கும் காலம். அப்பாவும் சிற்றப்பாவும் தொலை சென்றிருந்தனர். ஏழாம் ஆண்டிற்குள் போர் முடிந்து அவர்கள் திரும்பிவந்து விட்டார்கள். ஆனால் அந் நாளில் எங்கும் பரவி வந்த மூன்று நாட் காய்ச்சலுக்குப் பிறைக்கொழுந்தும் ஆளாகி விலக்குணவு முறையில் அழுந்திக் கிடந்தாள். அதனால் பிறந்த நாள் விருந்து எதற்கும் இடமில்லாது போயிற்று.

ஆனால் இந்த ஆண்டு எத்தகைய தடங்கலும் இருக்க வகையில்லை. மேலும் பிறந்த

நாள் ஞாயிறன்று வருவதால் அண்ணன் நிலாச்செல்வனும் வீட்டிலிருப்பான். அப்பா வுக்கும் சிற்றப்பாவுக்கும் விடுமுறை நாளாத லால் ஓய்வு எடுக்கக்கூட வேண்டியதில்லை. இதுவே பல ஆண்டுகளுக்கு முதலாவதாகக் கொண்டாடப்படும் பிறந்த நாளாதலால் மாமன் மைத்துனன் ஆகிய பலரும் ஒருவருட னொருவர் போட்டியிட்டு அவளுக்குப் பிறந்த நாள் பரிசுகளும் பண்டங்களும் அனுப்ப ஏற் பாடாயிருந்தது. ஆகவே அவள் அவ் வெட் டாம் பிறந்த நாளை ஆர்வத்துடன் எதிர்பார்த் திருந்தாள் என்று கூறவேண்டுவதில்லை யல் லவா ?

அவள் ஆவல் மிகுதியாக ஆக மணிப் பொறி வேண்டுமென்றே நகர்ந்து செல்வது போலிருந்தது. சனிக்கிழமையன்று நடந்த நிகழ்ச்சி அவர்கள் ஆவலைப் பின்னும் கிள றிற்று. அன்று காலையிலேயே அவர்கள் மாமா வீட்டிலிருந்து பெட்டி ஒன்று பிறைக்கொழுந் தின் வீட்டிற்கு வந்து சேர்ந்தது. அதனைக் கொண்டு வருபவருடைய முன்னெச்சரிக்கை யிலிருந்தே அதில் ஏதோ உடையக்கூடிய உயர் பொருள் இருக்கவேண்டும் என்று தெளிவா யிற்று. பெரும்பாலும் அது ஒரு புதுவகைப் பிறந்த நாள். பண்டமாகவே இருக்கவேண்டும்.

அது என்ன வகைப் பண்டமாகத்தான் இருக்கும் என்று அவளும் தங்கை மலைவளர்செல்வியும் எண்ணி எண்ணிப் பார்த்தும் ஒன்றும் உறுதியாகச் சொல்லமுடியவில்லை. அதனை அறியவேண்டுமென்ற ஆர்வத்தை அடக்க முடியாமல் துடித்த அவர்களுக்கு அந்தச் சனிக்கிழமை ஒரு கிழமையன்று ; ஒரு சிறிய ஊழியே என்று தோன்றிற்று.

அன்றைய வீட்டுப் பாடம் அவர்களுக்கும் சரி, ஆசிரியர் தையல் மாணிக்கத்துக்கும் சரி சித்திரவதையாகவே இருந்தது. என்ன சொல்லியும் ஒறுத்தும் நகைச்சுவை யூட்டியும் அன்று அவள் தன் பாட உலகத்திற்குள் அவர்களைக் கொண்டுவர முடியவில்லை. தமிழ் நாட்டின் தலைமையான ஆறுகளின் பெயர்களையும் அவற்றின் கரையிலுள்ள பெரிய நகரங்களையும் கூறுக என்பாள் ஆசிரியை. பிறைக்கொழுந்து விழிப்பாள். மலைமட்டும் பிறையின் விலாவைக் குடைந்து கொண்டே, ஏன் அக்கா, பாலாறு, நெய்யாறு, தேனாறு, மோராறு என்றெல்லாம் சொல்லலாமே என்பாள். உடனே பிறை தன்னை அடக்கமுடியாமல் சிரித்து விடுவாள். ஆசிரியை சினங்கொண்டு அதட்டிப் "புத்தகத்திலிருந்தாவது படித்து ஒப்புவி" என்பாள். பிறையும் வேண்டா வெறுப்பாய்த்

தொடங்கித் தண்பொருநையாறு—திருநெல் வேலி, வைகையாறு—மதுரை, காவிரியாறு— உறையூர் என்றிவ்வாறு உருவிடுவாள். இடை யிடையே ஆசிரியை முகந்திரும்பிய நேரத்தில் படிப்பெல்லாம் பிறந்த நாள் பண்ட ஆராய்ச்சி யிலேயே சென்றுவிடும். "அது என்னவாய்த் தானிருக்கக்கூடும், மனவோல மாயிருக்குமா, தேங்குழலாய் இருக்குமா, முறுக்காயிருக்குமா என்று ஆழ்ந்து சிந்தனை செய்வர். ஆசிரியர் வருமுன் நாவில் பழயபாடம் ஏறும். ஆனல் பெயர் இதற்குள்ளாக முன்பின்மாறித் தண் பொருநை — மதுரை, வைகை — உறையூர், காவிரி—திருநெல்வேலி எனத் தடுமாறிவிடும். ஆசிரியை முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும்.

ஆசிரியைக்கும் இன்று படிப்பு நேரம் விரைவிற் போகாதா என்று இருந்தது. பிள்ளை கள், ஆசிரியர் எப்போது தொலைவார் என்று உள்ளூற இருந்தபோதிலும், ஆசிரியர் நோகும் படி நடப்பவர் நல்ல பிள்ளைகள் அல்லர் என்ற அன்னையின் அறிவுரையை எண்ணித், தம் உடலையும் முகத்தோற்றத்தையும்கூட அடக்கி வைத்துக் கொண்டனர். ஆசிரியையின் பின் தலை மறைந்ததுமே இக் கட்டுப்பாடு முற்றி லும் அகன்றது. பிறந்தநாள் பண்டம் வைத்தி

ருந்த அறையின் பக்கமாகத் தடை அகற்றப் பெற்ற வில்போல் விரைந்து ஓடினர். அறை நன்ருக மூடிப் பூட்டப்பட்டிருந்தது. ஆயி னும் ஆவல் அடங்காமல் அறையை நாற்புற மும் சுற்றிச் சுற்றி வந்தனர். அவர்கள் ஐம் புலனும் ஆரும் புலனுகிய உய்த்துணர்வும் ஒரே விழிப்பாய் ஒன்றை ஒன்று போட்டியிட்டு அப்பண்ட ஆராய்ச்சியில் முனைந்திருந்தன.

மலை திடீரென்று பலகணிப்பக்கம் சுட் டிக் காட்டினுள். பலகணி நினைவு மறதியாகத் திறந்துவைக்கப்பட்டிருந்தது. அதன் வழி யாக எப்படியாவது உள்ளே சென்ருல் பண் டத்தின் தன்மையினை அறிந்து விடலாம். ஆனுல் பலகணி உயரத்தில் இருந்தது. பிறை மலையைத் தோளிலேற்றியும்கூட அது எட்ட வில்லை. இச் சமயம் நிலா பள்ளியிலிருந்து வந் தான். முதலில் தங்கள் வேட்டையின் இலக் கை அவர்கள் அவனிடமிருந்து மறைத்து வைக்கப்பார்த்தனர். ஆனுல் அவன் விரைவில் செய்தி இன்னதென உய்த்தறிந்து கூறிவிட் டான். அதன்பின் உள்ளே புகும் முறைபற்றி மூவரும் ஆராய்ச்சி செய்தனர். நிலா தன் மிதி வண்டியை எடுத்துவந்து அதில் ஏறி உட் சென்று பிறையையும் மலையையும் தூக்கி உள்ளே விட்டான். அனைவரும் தம் ஆர்வமும்

பின்னிட மூச்சைப் பிடித்துக்கொண்டு சென்று பெட்டியைத் திறந்து பார்த்தனர். அவரவர்கள் கண்களைப் பறித்தது. என்ன வியப்பு? சர்க்கரையிலும் சீனிப்பாகிலும் பால்கட்டியிலும் ஆக வகைவகையான மலர்கள், கனிகள், சிறுவீடு ஆகிய அனைத்தும் அப்படி அப்படியே உண்மையானவை என்று எண்ணும்படி சரியான உரு அமைப்புக்களுடனும் நிறங்களுடனும் இயற்றப்பட்டிருந்தன. நிலா கூட மூக்கில் கைவைத்துக்கொண்டு நெடு நேரம் அசைவற்று நின்றுவிட்டான்.

சட்டென்று அவர்கள் கவன மெல்லாம் அப் பண்டத்தின் மாய உலகினின்று இழுக்கப்பட்டது. சின்னாயி (வேலைக்காரி) பிறையைக் கூப்பிடும் குரல் கேட்டது. பண்டப் பெட்டியைத் திறந்தது திறந்தபடியே விட்டு விட்டு அனைவரும் விரைந்து வெளியே ஓடிவந்தனர். அவர்கள் அஞ்சியவண்ணம் அவர்கள் வேட்டையை யாரும் அறியவில்லை என்று கண்ட பின்னரே அவர்களுக்கு அமைதி ஏற்பட்டது. அதன் பிறகுதான் நிலாச் செல்வனுக்கு அப் பெட்டியைப் போய் மூடவேண்டுமே என்ற கவலை ஏற்பட்டது. இத் தடவை பிறையையும் மலையையும் வெளியே விட்டு விட்டு அவன்

மட்டும் உட்சென்று அதனை மூடிவைத்து விட்டு வெளியில் வந்தான்.

மறுநாள் பிறைக்கொழுந்து சிறிய மணப் பெண்போல அணிசெய்யப்பட்டு, மாமனுக்கும் சிற்றப்பனுக்கும் இடையில் நின்ருள். பல பல வகைப் பெட்டிகள் முன்னல் வைக்கப்பெற்றிருந்தன. ஒவ்வொன்ருக அம்மையும் சின்னுயியும் திறந்து காட்டினர். மாமன் பெட்டி இறுதியிலேயே திறக்கப்பட்டது. முந்தின நாள் அவ்வளவு ஆத்திரப்பட்ட பிறைக் கொழுந்து இன்று பொறுமையாய் எப்படி நிற்கிருளோ என்று சின்னுயி வியந்தாள். ஆனல் அப் பெட்டியைத் திறந்ததும் சரே லென எலி ஒன்று அதினின்று எல்லாரிடை யேயும் பிறிக்கொண்டு ஓடிற்று. அது பண் டங்களில் தோய்ந்திருந்ததால் எல்லார் மீதும் சர்க்கரைப்பாகையும் பால்கட்டியையும் சிதறிக்கொண்டு சென்றது. எல்லாரும் இது பிள்ளைகளின் குறும்புதான் என்று கண்டு பிறைக்கொழுந்தையும் நிலாவையும் கடுகடுத் துப் பார்த்துக்கொண்டனர். அருமையான பண்டம் போயிற்றே எனப் பிறையும் மலையும் உண்மையாகவே துயர் அடைந்தனர்.

முதலில் அப்பா பிறருடன் சேர்ந்து அவர்களை நையாண்டி செய்தார். பிறையின்

சர்க்கரைப் பண்டத்தைத் தின்ன ஒரு சர்க்கரை எலி வந்தது பார் என்று அவர் சொன்ன போது அழுகையினிடையும் பிறைக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் அவர் சின்னையியை யழைத்துப் 'போகட்டும், மாமா பரிசு போனதற்கு என் பரிசாவது ஆறுதலா யிருக்கட்டும், கொண்டுவா" என்றபோது அவர்கள் மீண்டும் வியப்படைந்தனர்.

அப்பாவின் பெட்டியில் மாமா தந்தது போலவே சர்க்கரையால் செய்த மலர்களும் கனிகளும் இருந்தன. ஆனால் பெட்டியில் இன்னொருபுறம் சர்க்கரையாலும் மாவாலும் செய்த அழகிய எலிப்பொறி ஒன்றிருந்தது. அப்பா அதைச்சுட்டிக்காட்டி "இனிச் சர்க்கரை எலிகள் எத்தனை வந்தாலும் கவலைவேண்டாம். அவற்றைப் பிடிக்க இதோ சர்க்கரைப்பொறி இருக்கிறது" என்றார். பிள்ளைகளும் பெற்றோரும் இது கேட்டு விழுந்து விழுந்து சிரித்தனர்.

நிலா மட்டும் சிரிக்காமல் அந்த எலிகள் பொறியையும் தின்றுவிட்டால்"? என்று ஆழ்ந்த சிந்தனையுடன் கேட்டான்.

2. செந்தாமரை உறைவாள்

பெருந்தன்மை என்று ஒன்று உலகில் இருக்கிறது என எனக்குக் கற்றுக்கொடுத்தவள் செந்தாமரை அத்தையே. பொன்மயிலும் சித்திரையும் அவள் கொடுக்கும் பண்டங்களில் மயங்குவதைக் காட்டிலும் அவர்களை விடப் பெரியவளான நான் அவ் ஒரு நாளைய நிகழ்ச்சியுடனேயே அவள் வசப்பட்டுவிட்டேன் என்று சொல்லவேண்டும்.

அப்படி அவள் எங்களுக்கு அன்று என்ன செய்தாள் என்று நீங்கள் கேட்பது இயற்கைதான். ஆனால் அந்தக்கதை ஒரு சிறு காப்பியம் என்று கூறலாம்.

எங்கள் அத்தை நித்திலம் அவளைப்பற்றி அடிக்கடிச் சொல்லுவதுண்டு. ஆனால் அவள் சொல்லியதிலிருந்து நாங்கள் அறிந்ததெல்லாம் அவள் ஒரு பெரிய இடத்துப் பெண்ணரசி; எங்கள் வீட்டுப்பக்கம் வருபவளுமல்லள்; எங்களைப் போன்றவர்களும் அவள் வீட்டுக்குப் போகும் தகுதி உடையவர்கள் அல்லர் என்றுதான். ஆயினும் அவள் இப்போது எங்களூர் தேடி வந்து எங்களை அழைத்துப் போகிறாள்.

ஆனால் இதெல்லாம் அந் நிகழ்ச்சிக்குப் பின் அல்லவா?

அப்போது வைகாசி மாதம் ஆனி மாதத்தில் எல்லாரும் உடல் நலத்திற்காகக் குற்ருலம் போவார்கள். ஆனுல் வைகாசியிலேயே தங்கள் விடுமுறையைக் கழிக்க விரும்புபவர்கள் கன்னியாக் குமரிக்குத்தான் செல்வர். செந்தாமரை உறைவாள் கன்னியாக் குமரியில் ஒரு வீடு எடுத்து அங்கே ஒன்றிரண்டு மாதம் தங்க இருப்பதால் நித்திலத் தத்தையும் அருகில் ஒரு குடிசை எடுத்துக்கொண்டு தங்கியிருக்கிருள் என்று நாங்கள் அறிந்தோம். கன்னியாக்குமரி மிகவும் அருகிலேயே இருப்பதால் எங்களுக்கு விடுமுறை விட்டவுடன் நாங்களும் அங்கேயே போய்ச் சிலநாள் தங்கலாம் என்று அவள் எழுதியிருந்தாள்.

கன்னியாக் குமரிக்குப் போய் அங்குள்ள பல பல வண்ணமுடைய மணல்களையும் கல் மணிகளையும் வைத்து விளையாட விரும்பாதவர்கள் யார்? அதுவும் அத்தை அங்கிருக்கும் போது? நாங்கள் எல்லாரும் பள்ளி மூடும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தோம். ‘‘பள்ளிக்கூடம் வைகாசி 15-ல் அடைத்து விடும்; 16 காலையிலேயே அங்கே வந்து விடுவோம்’’ என்று அப்பா கடிதத்துக்குள் கடிதம் வைத்து எழுதியும் விட்டோம்.

ஆனுல் இவ் ஆண்டு குருட்டுயோகம். பள்ளிக்கூடம் முன்னமே மூடிவிட்டார்கள்.

11 வேயே பள்ளிவிடுமுறை தொடங்கிற்று. அம்மா இன்னொரு கடிதம் போட்டுப் போகும் நாள் தெரிவித்துக்கொண்டு போகலாம் என்று சொன்னாள். எங்களுக்கு அதுவரை பொறுக்க முடியவில்லை. அப்பாவும் "போகிறது! நித்தி லத்துக்கு இவர்கள் போவது கடிதம் போவ தை விட நல்லதுதானே. போய்வரட்டுமே" என்றார். பின் அவரே வேலையாளை அழைத்து "செந்தில்! வண்டிபூட்டி இவர்களைக் கன்னி யாக் குமரியில் கொண்டுவிட்டு வா" என்றார்.

எங்களூராகிய வடவன் குளத்திலிருந்து கன்னியாக்குமரி ஏழெட்டுக்கல் தொலைவுக் குள்ளாகவே இருக்கும். காலையில் புறப்பட் டுப் பத்துப் பதினொன்றரைக்குள்ளாகவே போய்ச்சேர்ந்துவிட்டோம். அம்மா கொடுத்த நெய் விட்ட பிட்டு முழுவதையும் வழியிலேயே தின்று விட்டபடியால் அங்கே போவதற்குள் பசி உண்டாயிற்று. சித்திரைக்கும் நங்கைக் கும் "அதோ, அத்தை வீடு, அதோ அத்தை வீடு" என்று கூறிக்கொண்டே சென்றோம்.

ஊர்ப்புறத்தில் வைத்து எங்களெதிரே ஒரு நல்ல பெட்டிவண்டி வந்தது. நானோ செந்திலோ அதனைக் கவனிக்குமுன் நங்கை கையைத் தூண்டிக் காட்டி "அத்தை" "அத் தை" என்றாள். கிட்ட வரவர வண்டியில் வரு

வது அத்தைதான் என்று தெரிந்தது. அவ ளும் இறங்கி "வா நங்கை, வா அலமு" என்று எங்களை அணைத்துக்கொண்டாள். பின் "நீங் கள் பதினுறன்று வருவதாக எண்ணிக்கொண் டல்லவா புறப்பட்டு விட்டேன். ஆயினும் கேடில்லை. மாலைக்குள் வந்துவிடுவேன். வீடு திறந்திருக்கும். தொட்டியின் நேர் மேல்புறம் திறவு இருக்கும். அதன்மூலம் உன் வீட்டைத் திறந்து அடுக்களையில் கண்ணுடி பலகையில் உள்ள பணியாரத்தையும் அரங்கில் மூங்கிற் பெட்டியில் உள்ள பழங்களையும் உண்டு பசி யாறி இருங்கள்." என்று சொல்லிவிட்டு வண் டியிலேறிப் போய்விட்டாள்.

அவள் சொன்ன அடையாளப்படியே அரசாங்க விடுதி கடந்து கடற்கரையோரப் பாதையின் வழியாகப் புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடங்களின் வரிசையில் சென்ருேம். மற்ற வீடுகளினும் சற்றுத் தாழ்ந்த நான்கு வீடுகள் ஒரே வரிசையிலிருந்தன. அவற்றை ஒட்டி யது தன் குடிசை என்று அத்தை கூறியிருந் தாள். ஆனுல் அவற்றுக்குப்பின் வீடே இல்லை. அத்தை வீடு எதுவாய்த்தான் இருக்கும் என்று நாங்கள் ஆராய்ச்சி செய்துகொண் டிருக்கை யில் பொன்மயில் கடைசி வீட்டைச் சுட்டிக் காட்டி அதோ வீடும் திறந்திருக்கிறது. பக்கத்

தில் பார் தொட்டி என்ருள். அத்தை கூறிய வற்றை நினைவில் வைத்துக்கொண்டு உய்த் தறிந்த அவள் அறிவை மெச்சிக்கொண்டு தொட்டியின் மேற்புறம் பார்த்தோம். திறவு இருந்தது. ஐயம் தீர்ந்து இதுதான் அத்தை வீடு என்ற உறுதியுடன் உள்ளே போனேம். மேடைப் பலகையின்மீது தின்பண்டங்கள் இருந்தன. அத்தை பணியாரம் மட்டும் தானே இருந்தது என்று கூறினுள். அடுக்களையில் சென்ருேம். எங்கும் தேடியும் பணியாரம் இல்லை. பழங்களும் இல்லை. ஆனுல் பாலும் பாலுறை கட்டியும் இருந்தன. முதலில் கொஞ் சம் மலைத்தோம். சித்திரை இவற்றைத்தான் அத்தை பணியாரம் என்றிருப்பாள் என்று சொல்லிக்கொண்டு யாரையும் எதிர்பாராமல் தின்பண்டங்களைத் தின்னத் தொடங்கினுள். அனைவருக்கும் பசியானதால் மறுசொல் பேசா மல் எல்லாரும் வயிருர உண்டோம். பாலை நாங்களும் பருகிச் செந்திலுக்கும் கொடுத் தோம்.

அப்போது வெளியிலிருந்து திடு திடு என்று ஒரு மாது உள்ளே வந்தவள் எங்களைப் பார்த்துத் தயங்கி நின்ருள். அவள் உயர்ந்த ஆடை அணிந்திருந்தாள். ஆனுல் ஆடைகள் வெண்மையா யிருந்தது கண்டு நாங்கள் அவள்

யாரோ எவரோ என்று வியந்தோம். நான் அவளைப் பார்த்து அம்மா நீ யார்; ஏன் வீட்டிற்குள் வருகிறாய்? என்றேன். அவள் நித்திலத்தைப் பார்க்க வந்தேன். அவள் இல்லை என்று போகிறேன் என்று கூறிவிட்டு வெளியே சென்றாள்.

அவள் போனபின் அவள் யாராயிருக்கக் கூடும் என்று ஆராய்ச்சி செய்தோம். அவள் வீட்டில் அவ்வளவு தங்கு தடையின்றி நுழைவானேன். திருடுவதற்குப் புகுந்தாள் என்று கூறவும் வழியில்லை. அவள் நல்ல உடை உடுத்திருந்தாள். ஆனால் உடை ஆடவர் உடை போல் வெள்ளை ஆடையாயிருப்பானேன்! எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

கொஞ்ச நேரத்திற்குள் நாங்கள் வீட்டை ஆராய்ச்சி செய்தோம். பின்பக்கம் தென்னையும் கமுகும் நிறைந்த தோட்டம். அங்கங்கே செவ்வாழைக் கன்றுகள் நடப்பட்டிருந்தன. தோட்டம் கடற்கரையிலேயே இருந்ததனால் அலைகளின் இரைச்சல் கேட்டுக்கொண்டே இருந்தது. அங்கங்கே 'கால்' எடுத்துப் போட்டமணல் தேரி தேரியாய்க் குவிந்து கிடந்தது. அதில் எங்கள் ஆவல் தீர உருண்டு ஓடியாடி விளையாடினோம்.

மாலை நாலு மணிக்கு வந்து மீந்த பண்டங்களை முடித்தோம். அப்போதும் அம்மாது

பலகணி வழியாக எட்டி எட்டிப் பார்ப்பதைச் செந்தில் கவனித்து அம்மா, உங்களுக்கு என்ன வேண்டும் என்றான். "நீங்கள் உண்டு ஏதாவது மீதி இருந்தால் எனக்குக் கொடுங்கள்" என்றாள். தின் பண்டங்கள் யாவும் தீர்ந்து விட்டாலும் எங்களுக்குப் பழக்கமில்லாத கல் போன்ற தோசைகள் ஒரு தட்டத்திலிருந்ததைக் கவனித்திருந்தோம். அதனை அவளுக்குக் கொடுத்தோம். நாங்கள் அடைந்த வியப்பிற்கு அளவில்லை. உயர்ந்த உடையணிந்த அந்த மாது அந்தக் கல் தோசையைத் தின்று பசியாறியதுபோல் காணப்பட்டது. பின் தண்ணீர் கேட்டு வாங்கிக் குடித்துவிட்டு "இனி நீங்கள் விளையாடப் போகலாம். உங்களைத் தொந்தரவு செய்ய மாட்டேன்" என்றாள்.

அவள் நடை உடை தோற்றம் எதனையும் இன்னதுதான் என்று என்னால் வரையறுக்க முடியாமலிருந்தது. பொன்மயிலும் சித்திரையும் நங்கையும் கூச்சலிடும்போதும் கடற்கரையில் மாலையிளவெயில் நிலவுபோல் பொன்னிறத்துடன் எங்களைக் களிப்பூட்டியபோதும் அவற்றை என்னால் மறக்க முடியவில்லை.

சங்கிலிப்பாறையில் நின்று கொந்தளிக்கும் ஆனைக்குழியில் அலைகள் திரண்டெழுந்து மோதிப் பாய்வதைக் கண்டு அச்சமும் கலக்க

மும் கொண்டோம். கிட்டத்தட்ட மூன்று பக்கங்களில் கடல் மலைப்பாம்புபோல் வீங்கி வீங்கி எழுவதையும் வளைந்து வளைந்து கொடுப்பதையும் பார்த்தோம். முகிலினங்கள் கதிரவன் ஒளியினை ஏற்றும் எடுத்தெறிந்தும் பல வகை வடிவில் திகழ்வதைக் கண்டு அவ்வுருவம் இன்னதுதான் என்று ஒப்பிட்டறிய ஒருவருடன் ஒருவர் வாதாடினேம். எங்கள் வாதினிடையே அம்முகிலினம் இருந்த இடத்திலே ஒன்றுமே காணுமற் போயிற்று. இங்ஙனமாக மாலை நேரம் சென்றது.

விளக்கு வைக்கும் நேரத்தில் அத்தையின் வண்டி,பாதையில் வருவது கண்டு எதிரே ஓடிச் சென்றேம். அத்தை நங்கையைத் தோளினும் சித்திரையை இடுப்பிலும் எடுத்துக்கொண்டு என்னையும் பொன்மயிலையும் ஆதரவுடன் அழைத்துச் சென்றாள். ஆனால் அவள் நாங்கள் எதிர்பார்த்த வீட்டின் பக்கம் செல்லாமல் அதன் வெளிப்புறத்தி லிருந்த குடிசையில் நுழைந்தாள்.

'அத்தை ! அது உன் வீடில்லையா ?'

'இல்லையே, அதுதான் செந்தாமரையம்மாள் வீடு. அங்கேதான் நான் வேலை செய்கிறேன்.'

எங்களுக்கு மிகவும் திடுக்கிட்டது. ஐயையோ, அந்த அம்மாள் வீட்டில் அவள்

உணவைத் தின்று அவளைப் பிச்சைக்காரியைப் போலவும் திருடியைப் போலவும் நடத்திவிட்டோமே என்று நாங்கள் வருந்தினோம். அத்தையும் கையை நெரித்துக்கொண்டு "இப்படிப் பண்ணுவார்களோ! இனி அம்மா முகத்தில் எப்படி விழிப்பது" என்றாள்.

அச்சமயம் ஒரு குரல் "நீ என்னைத் தப்பாக எண்ணாதே நித்திலம். நான் தப்பாக எண்ணவில்லை. குழந்தைகளில்லா வீட்டில் குழந்தைகள் தம் வீடுபோல் நடந்து கொண்டது எனக்கு எவ்வளவோ மகிழ்ச்சி. இது வரை நான் உண்ட உண்டிகள் யாவற்றினும் பசி வேளையில் அலமு கொடுத்த ஒரட்டியே எனக்கு இனிமையாயிருந்தது" என்றாள்.

நான் அம்மாள் பக்கம் சென்று காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டேன். அவர்கள் "என்னை அம்மாள் என்று கூப்பிடாதே. நித்திலத்தைப்போல நானும் உனக்கு அத்தை. என் வீட்டையும் அத்தை வீடாகவே எண்ணி விளையாடி இருங்கள்" என்றார்கள்.

நடந்தவற்றின் அருமை முற்றிலும் அறியாமலேயே தம்பி, தங்கையர், செந்தாமரை அத்தையிடம் அன்பு பாராட்டுகின்றனர். நானும் நித்தில அத்தையும் அவள் அன்புத் தெய்வம் என்றே பாராட்டுகிறோம்.

இப்போது கன்னியாக்குமரிக்கு மட்டு மல்ல; செந்தாமரை யத்தையின் பிறந்த ஊராகிய விழிஞத்திற்கும் நான் பலதடவை போய்த் தங்கியிருக்கிறேன். அவள் உறவினர் அனைவர்க்கும் நாங்கள் உறவினராய் விட்டோம். அவர்கள் வெள் ஆடை இப்போது எனக்கு வியப்புக்கு இடமாகவு மில்லை. அது அவ்வூர்ப்புறங்களின் வழக்கம் என்று கண்டு கொண்டேன். நாங்கள் தின்ன முடியாது வைத்திருந்த கல் தோசையாகிய 'ஒரட்டி'யும் இப்பக்கத்து உண்டி வகைகளில் ஒன்று என்று அறிந்தேன். முதலில் கடினமாயிருந்தது, தின்று பழகிவிட்டபின் இப்போது எனக்கு இன்றியமையாத உணவாகிவிட்டது. ஆனால் இவற்றை யெல்லாம் விட செந்தாமரையாள் உறவு எனக்கு மிகவும் இன்றியமையாத தாகி விட்டது.

செந்தாமரை அத்தை அழகாகத் தமிழ் பேசுகிறாள். ஆனால் அவர்கள் தாய்மொழி தமிழல்லவாம். மலையாளமாய். அவர்கள் உற வினரும் நன்றாகத் தமிழ் பேசுகிறார்கள். நித் தில அத்தை செந்தாமரை யத்தையுடன் சிறுமையிலிருந்தே பழகியிருந்தபடியால் அவ ளுக்குத் தேவாரப் பண்கள், திருவாசகப் பாடல்கள் பயிற்றுவித்திருந்தாள். இன்று அவற்றைச் செந்தாமரை யத்தையிடமிருந்து கொண்டு நான் பயின்று வருகிறேன்.

3. பொற் கூண்டு

சென்னை மா நகரில் சீன வீதியில் "பழனி வேல் நிலயம்" என்றொரு கண்ணாடி வாணிப நிலயம் உண்டு. அதிலுள்ள பல பகுதிகளில் மூக்குக் கண்ணாடிகளுக்கான பொற் சட்டங்கள் செய்யும் பகுதிக்கு ஆறுமுக முதலியார் தலைவரா யிருந்தார். நிலயத்தின் உடையவரான பழ. வே. மாணிக்கம் பிள்ளைக்கு இப் பகுதியைப்பற்றிய வரையில் இவரே பொறுப்புடையவர்.

ஆறுமுக முதலியார் நேர்மையும் ஒழுக்கமும் உடையவர். எனவே அவர் தனக்குக் கீழுள்ள பணியாளர்க ளனைவரையும்—இருநூறு வெள்ளி, திங்கள்தோறும் பெறுபவர் முதல் வாரம் இரண்டரை வெள்ளி பெறுபவர் வரை—வாய்மையும் உழைப்பும் உடையவராகவே பொறுக்கி எடுத்து அமர்த்தி இருந்தார். ஆதலால் உண்மையில் அவர் பகுதியே நிலயத்தின் மற்றெல்லாப் பகுதிகளையும் விடப் பொறுப்பு உடையதாயினும், அவர் பார்வைக்குப் பொறுப்பற்றவர் போலக் கவலை யற்றுத் தம் வேலையைக் கவனித்து வந்தார்.

சில ஆண்டுகளுக்குமுன் சித்திரைத் திங்களின் போது நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி அவரது இந்த உள்ள "மிதப்பு"க்கு ஓர் அதிர்ச்சி தந்தது.

ஒரு நாள் ஆறுமுக முதலியார் மேடைப் பலகை யண்டையிலிருந்து கணக்குச் சரிபார்த்துக் கொண்டிருந்தார்.

பொற் சட்டங்களைத் தூசி துடைத்துப் பழுப்பேற்றும் பொறுப்புடைய பழைய கிழ வேலையாள் சுண்டிய முகத்துடனும் நடுங்கிய தோற்றத்துடனும் வந்து தழுதழுத்த குரலில் தயங்கிக்கொண்டு "ஐய, நான் இனி என்ன செய்வேன்; தெய்வம் அறிய நான் ஒரு தவறும் செய்ய வில்லை! நான் இனி என்ன செய்வேன்?" என்றார்.

அவரது முதுமைக்கும் நிலையத்தில் நெடு நாள் பழகிய பழக்கத்திற்கும் ஆழ்ந்த மதிப்பு வைத்திருந்த முதலியார் "ஏன் ஐயா, என்ன நடந்தது? நீங்கள் எதற்காக அஞ்சவேண்டும்?" என்றார்.

கிழவர் : வேறொன்று மில்லை, ஐயா ! சற்று முன் எண்ணிப்பார்க்கும் போது கணக்காய் நூற்றெட்டுச் சட்டங்கள் இருந்தன. அடுத்த அறைக் கணக்கனொருவனைக் கண்டுவிட்டு, வந்து பார்க்கவும் சட்டங்கள் குறைந்தவை போலிருந்தன. எண்ணிப் பார்த்தேன். இருபத்தேழு குறைய எண்பத் தேழுதான் இருக்கின்றன.

"ஆ, இருபத்தேழா காணவில்லை" என்று திடுக்கிட்டெழுந்தார் முதலியார். கிழவரிடம்

அவருக்குச் சற்றும் ஐயம் இல்லை. ஐயப்படத் தக்கவராக யாருமேதான் நிலையத்தில் இல்லையே. அவர் தானே நேரிற் சென்று எண்ணிப் பார்த்தார். பின் அதுபற்றி உசாவும்படி மேலாளையும் பிற பணியாளரையும் நயமும் பயமும் கலந்து உறுக்கிவிட்டுக் கவலையுடன் வீடு சென்றார்.

எதிர்பாராத வகையில் இதே செய்தி, இதே மாயச் செய்தி மறு நாளும் நடந்தது. அன்று காணுமற்போனவை பத்தொன்பது சட்டங்கள். ஒவ்வொரு சட்டமும் அன்றைய விலையில்கூட இருபத்தெட்டு வெள்ளிக்கு விற்பது. நிலையக்கொள்முதலே பதினெட்டுக்கு மேலாகும். அப்படியிருக்க முதலியாரும் பிற பணியாளரும் கவலை கொண்டதில் என்ன வியப்பு?

அவர்கள் கவலையால் பயன் எதுவும் ஏற்படவில்லை. அடுத்த நாளும், அதற் கடுத்த நாளும், இப்படியே நாள்தோறும் நடக்கலாயிற்று. எத்தனை நாள் இப்படி விடுவது? திருட்டைத்தான் கண்டுபிடிக்க வேண்டாமா?

எல்லாரும், காவலரும் துப்பறிபவரும் கூட இம் முயற்சியில் சலிப்பெய்தி விட்டனர்.

எப்படியும் திருட்டு நடப்பதைக் கண்ணுரக் காண்பதென்ற உறுதியுடன் முதலியார்

ஒரு நாள் அவ் வறையிலேயே காத்திருந்து விட்டார். உணவும் விடாய் நீரும்கூட அவ் விடமே வரும்படி ஏற்பாடு செய்திருந்தார்.

காத்துக் காத்துச் சோர்வுற்றுச் சற்றே கண்மயங்கும் நேரம், ஏதோ சிறகடிக்கும் அரவம் கேட்டுத் திடுக்கிட்டு நோக்கினார். அப் போது அவர் கண்டதை அவரால் நம்பமுடிய வில்லை. ஏனெனில் கண்ணாடிச் சட்டங்களைத் திருடியவன் பணியாளனும் அல்லன். வேறு வெளியாள் எவனும்கூட அல்லன். அது உண் மையில் ஒரு காக்கையே.

ஒரு காகம் ஏன் இப் பொன்னுக்கு ஆவற் பட்டுத் தொடர்ச்சியாக முயன்று இதனைத் திருடவேண்டுமென்று அவருக்கு விளங்க வில்லை. ஆயினும் மறு நாள் முதல் தம் ஆட் களை முன்எச்சரிக்கை செய்துவைத்து அக் காகத்தைப் பின் தொடரும்படி தூண்டினர்.

இரண்டு மூன்று நாட்களுக்குள் காக்கை யின் போக்குவரத்து, அது செல்லுமிடம் எல் லாம் கண்டு பிடிக்கப்பட்டன. சுவருக்கு அப் பால் சற்று நீண்டிருந்த ஓர் உயர்ந்த மாடிக் கூரையினடியில் அக் காகமும் அதன் அலகி லிருந்த பொன் சட்டங்களும் சென்று மறை வதை அவர்கள் கண்டனர்.

மனிதர்களிடையே எல்லாரையும் போலிராமல் சற்றுத் தனிப்பட்ட பேர்வழிகள் உண்டல்லவா? அது போலக் காக்கையிலும் இது ஒரு தனிப்பட்ட காக்கை என்று சொல்லலாம். எல்லாக் காக்கைகளும் சுள்ளிகள் பஞ்சுத் துணுக்குகள், வைக்கோல் பதர்கள் முதலியவற்ருல் கூடுகட்டும். கொஞ்சம் "பேராவல்" கொண்ட காக்கைகள் உலர்ந்த பல நிறப் பாசிகளையும் மெல்லிய இறகுகளையும் தேடிக் கொணரும். ஆனல் நம் காக்கை அவற்ருலெல்லாம் உள நிறைவடையவில்லை.

காக்கை உலகிலேயே என்றும் காணப் படாத வகையில் உயர்ந்த நேர்த்தியான பொருளினல் நான் கூடுகட்டுவேன் என்று அது தன் பெட்டையிடம் கூறிவிட்டு அதன்படி நாள்தோறும் தேடிற்று. ஒரு நாள் அது "பழனிவேல் நிலைய"த்திலுள்ள பளபளப்பான பொற் சட்டங்களைக் கண்டதும் "ஆ, இவையே என் அரிய பொன் குஞ்சுகளுக்கு ஏற்றவை!" என்று தேர்ந்தது. அச்சட்டங்கள் அதன் கண்ணுக்கு மற்றச்சுள்ளிகளைக் காட்டிலும் பளபளப்பான பொற் சுள்ளிகளாகத் தோற்றினவேயன்றி வேறல்ல.

அப் "பொற் சுள்ளி"களை அது கவரப் பட்டபாட்டை அதனைப்போல் பிள்ளைகளைப்

பேணுவதில் கருத்துச் செலுத்தும் தந்தைகள் கூட அறியமாட்டார்கள். பல நாழிகை காத்து எல்லார் கண்களும் வேறு பக்கமா யிருக்கும் நேரம் பார்த்துச் சட்டெனப் பல கணி வழியாக உட் சென்று அலகில் கொள்ளு மளவு பொற் சட்டங்களைக் கௌவிக்கொண்டு நேரே தன் இருப்பிடத்தில் அவற்றைக் கொண்டு சேர்க்கும். அதன் பின் மீண்டும் வந்து பலகணியி னருகிலுள்ள மரங்களி லிருந்து கொண்டு மறுதடவை உட்செல்லும் வாய்ப்பை எதிர் நோக்கிக் காத்துக்கொண் டிருக்கும். திருடுபவன் திருட்டினும் காப்ப வன் காவலே பெரி தென்றபடி, இத்திறம் பட்ட திருட்டினைக் கண்டுபிடிக்க ஆறுமுக முதலியார் போன்ற கணக்கறிஞருக்குக் கூடப் பல நாள் பிடித்தது.

இறுதியில் வேலை யாட்கள், காகம் தங்கிய கூரை வீட்டின் உடையவர் இணக்கம் பெற்றுக் காக்கையின் அழகிய பொற் கூட்டை எடுத்து வரும்போது அவர்கள் கண்ட காட்சி வாழ்க்கையின் மேடு பள்ளங்களில் அடிபட்டுத் தேறிய அவர்கள் உள்ளங்களையும் கனியச் செய்வதா யிருந்தது.

முதலில் அவர்கள் கூட்டின் பக்கமாக ஏறிச் சென்றது கண்டு ஆண் காக்கை "கக் கூ,

கக் கூ" என்று கூவிற்று. அதன் பின் கூட்டண்டை அவர்கள் சென்றபோது பெடையும் வெளிவந்து சுழன்று சுழன்று கரைந்தது. கொஞ்ச நேரத்திற்குள் அண்டை அயல் காக்கைகளெல்லாம் பக்கத்திலுள்ள மரக்கொம்புகள், மேடுகள், தந்திக்கம்பங்கள் ஆகியவற்றில் வந்து கூடின. கூட்டை மனிதர் தொட்டது கண்டு அவைகளெல்லாம் இரைந்து கொண்டு வந்து அவர்களைக் கொத்த வந்தன. ஆனால் அவர்கள் நீண்ட கழிகளால் அவற்றை அண்டிவர வொட்டாமல் தடுத்தனர். ஆயினும் பெடைக்காக்கையும் ஆண் காக்கையும் படும்பாடு காணப் பொருத தலைமையான வேலையாள் ஒருவன் கூட்டிலிருந்த சிறு குஞ்சுகளை வெளியிலெடுத்துக் கூரைப்பக்கம் விட்டான். பொன்னினும் மிகுதியாகக் குஞ்சுகளையேகருதிய அக்காக இணைகள் கூட்டிலுள்ள பற்றைவிட்டு விட்டுக் குஞ்சுகளிடம் ஆவலுடன் சென்றன. அவற்றின் வருத்தத்திலும், ஆர்வத்திலும் பங்கு கொண்டவை போலக் காக்கைத் தொகுதி யனைத்தும் ஒத்துணர்வுடன் கலகலத்துக் கூவின.

ஒரு சில காக்கைகள் மட்டும் நிலையம் வரை கூட்டினை இழக்க மனமில்லாதவை போல் வந்தன. ஆனால் கூட்டின் "சிற்பி"

யான காகம் அவற்றுடன் செல்லவில்லை. அது குஞ்சுகளிடமே அமர்ந்திருந்தது.

கூட்டினைப் பிரித்து எண்ணிப் பார்த்த போது நூற்றறுபது முழுச்சட்டங்களும் ஒடிந்தும் வளைந்தும் போனவை சிலவும் இருந்தன. இருப்புக் கணக்கில் குறைபட்ட சட்டங்கள் நூற்றெண்பத்திரண்டிற்கு இவை கிட்டத் தட்டச் சரியாயிருந்தபடியால் ஆறுமுக முதலியாரின் கவலை தீர்ந்தது. பணியாட்களுக்கும் போன உயிர் திரும்பி வந்தது.

'சிற்பி'க் காகமும் பொன்கூடு கட்டும் முயற்சி யொழித்துக் காக்கை யுலகத்தோ டொட்டி யொழுகத் தலைப்பட்டது.

---

4. குருட்டு யோகம்

நீங்கள் பல கழகங்களையும் மாநாடுகளையும் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் எங்கள் கழகம் அவை எல்லாவற்றையும் விடப் புதுமையானது.

அது வேட்டைக் கழகம், வேட்டை நாய்க் கழகம். அதில் உறுப்பினர் ஐந்துபேர்—பஞ்ச மூர்த்திகள் மாதிரி; ஐந்தென்றால் ஐந்துதான். உலகிலுள்ள எல்லா நாய் வகைகளும் அந்த ஐந்தினுள் அடங்கிவிடும். தரையோடு தரை

யாகப் பதுங்கிவரும் கட்டையன் என்ன, விச்சு என்ற குச்சு நாய் என்ன, உடையப்பன் என்றசடை நாய், நெல்லை என்ற நாட்டு நாய். காட்டான் என்ற முதல்தர வேட்டை நாய் ஆகிய இத்தனையையும் விட இனி வேறென்ன வேண்டும்.

கழகம் கூடுமிடம் ஊரின் புறத்துள்ள படர்ந்த ஆலமரம். அதன் வேர்களே உறுப்பினர் இருக்கைகள். அவற்றிலிருந்து தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். சொற்போர்கள் நிகழும். நாய்கள் என்ன சொற்போர், என்ன தீர்மானங்கள் செய்யும் என்று கேட்காதீர்கள்! நாய்கள் என்றால் நாயின் உடையவர்களாகிய நாங்கள் தான்.

நெடுநாளாக எங்கள் கழகம் விளையாட்டுக் கழகமாக, சிறுவர் கழகமாகத்தானிருந்தது. இருந்தாற்போலிருந்து அது ஒரு "வெற்றி"க் கழகம், பெரியவர்களும் மதிக்கும் உயர்தரக் கழகம் ஆயிற்று.

அது எப்படி என்று கேட்கிறீர்களா?

எங்கள் கழகத்தைப்பற்றி மருதனுக்குப் பெருமை மிகுதி. அடிக்கடி அவன் அதன் உயர்வைப்பற்றி வீம்படித்துக் கொள்வான். அவன் தமையனான சாத்தனுக்குக் கழகமென்றால் பிடிக்காது. அதனைப்பற்றி ஏளனமாக

நகையாடுவான். மருதன் ஒரு நாள் கழகத்தின் ஆண்டு விழா ஆட்டம் ஆடப்போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தான். அதைக் கேட்டுக் கொண்டிருந்த சாத்தன் சிரி சிரி என்று சிரித்து "ஆண்டு விழாவேறு உங்கள் கழகத்திற்கு? நீங்கள் ஆனை மேல் ஆடுவீர்களோ, குதிரைமேல் ஆடுவீர்களோ?" என்றான். மருதன் வீறுப்புடன் "உன் சொல்படியே தான் ஆகட்டுமே. இந்த ஆண்டு ஆட்டம் குதிரை மேல் தான்" என்று கூறிவிட்டான்.

மருதன் சொன்னால் சொன்னபடி. அவன் வீடு பண்ணை வீடு. ஆதலால் அவனுடைய பண்ணைக் குதிரைகள் இரண்டு வந்து சேர்ந்தன. சோனிக்கு ஒரு மட்டக் குதிரை அகப்பட்டது. போதாக்குறைக்கு வண்டிக் குதிரைகளைச் சேர்த்து ஓட்டத் தீர்மானித்தோம். வள்ளி மட்டும் பாவம், "குதிரையே வேண்டாம், நான் குதிரைக்கு எங்கே போவேன்" என்றாள். "குதிரை இருந்தால் வா, இல்லாவிட்டால் வேண்டா" என்றான் சுடலை. அதோடு சோனியும் மருதனும் "பெண்கள் வேட்டைக்கு என் வரவேண்டும்?" என்றார்கள். அது கேட்டு வள்ளி வெப்பத்துடன் "பெண்கள் ஏன், நான் வராமல் தான் உங்கள் விழா நடக்கப் போகிறதோ, பார்க்கிறேன்"

என்று சூள் கூறிச் சென்றாள். "வள்ளியை இவ்வளவு கடிந்து கொண்டது தவறு. அவள் சொல்வது எனக்கு வருத்தமாயிருக்கிறது" என்றாள் மாலை.

வேட்டையாடுவதற்கு முதல் ஏற்பாடு மோப்பம் இடுவதுதான். அதைக் கழகத்திற்கு வெளியிலிருந்துதான் யாராவது செய்யவேண்டும். அப்போதுதான் எதிர்பாரா ஆர்வமும் புதுமை உணர்ச்சியும் இருக்கும். சாத்தன் அப்போது அங்கே வந்து "நான் மோப்பம் இடுகிறேன்" என்றான். அவன் முன் வந்தது எல்லோருக்கும் வியப்பாகவே இருந்தது. எங்கே முற்றிலும் குறும்புக்காகத்தானோ என்று முதலில் அஞ்சினோம். மாலை "நீ வேண்டாம், நீ குறும்புக்காரன்" என்று சொல்லியே விட்டாள். அது கேட்டு அவன் முகம் சுண்டிற்று. அப்போது எங்கள் மனம் தெளிவுற்றது. மருதன் தன் அண்ணன் இடுப்பில் கைகோத்துக்கொண்டு "நன்றாக மோப்பமிட வேண்டும், தெரியுமா? கழகத்திற்கு மன நிறைவுபட மோப்பமிட்டால் கழகம் பரிசு தரும்" என்றான்.

மாலை: ஆட்டு மந்தைப் பக்கமோ கோழிக் கூட்டிலோ போய் மோப்பம் வைத்து எங்களை அலைக்கழிக்க வைத்துவிடாதே!

சாத்தன்: அப்படியெல்லாம் செய்வேனா? எனக்கும் விளையாட்டின் அருமை தெரியாதா?

வேறு வழியில்லாததை எண்ணியும் ஒரு தடவை சாத்தனைத் தான் அளந்தறிவோமே என்று கருதியும் அவனை மேற்பமிட இணங்கினோம்.

புறப்படும் இடம் ஆலமரம். நேரம் காலை 6-30 என்று உறுதி செய்யப்பட்டது.

வள்ளியைத் தவிர எல்லாரும் ஒவ்வொரு குதிரை கொண்டுவந்து விட்டார்கள். எங்களை விட எங்கள் குதிரைகளுக்கு மன எழுச்சி; குதிரைகளைவிட நாய்களுக்கு எழுச்சி என்று கூறவேண்டும். அவைகள் கட்டுக் கடங்காது இழுத்திழுத்து நாங்கள் அவற்றைக் கட்டியிருந்த ஆல விழுதுகளைத் தேய்த்து விட்டன.

சோனி வெயிலில் அடியளந்து 6-30 ஆயிற்று என்றான். மருதன் பூம், பூம் எனக் கொம்பூதினான்.

உடனே நாய்கள் அவிழ்த்து விடப்பட்டன. குதிரைகள் அதன்பின்.

புறப்பட்ட கொஞ்ச நேரத்துக்குள் சோனி, 'பாவம், வள்ளி வரக்கூடவில்லை' என்றான்.

'அடடட, அடடட, உங்களுக்குத்தான் எவ்வளவு பரிவு'! என்று வள்ளியின் குரல்

களைப்புடன் பின்னாலிருந்து வந்தது. குதிரைகளை ஒரு மட்டில் நிறுத்திக்கொண்டு திரும்பிப் பார்த்தோம்.

கோபுரம் போல் உயர்ந்து அச்சந்தரும் பாரிய குதிரை ஒன்றின் மேலிருந்து வந்தது அக்குரல். குன்றின் மேல் குருவி இருந்தது போல் அதன்மேல் இருந்தாள் வள்ளி. முதல் வியப்புத் தீர்ந்தபின் எல்லாரும் சிரித்துக் கொண்டு "இது என்ன வரவு, வள்ளி!" என்றோம்.

வள்ளி:—"என்னையா ஏய்த்துச் செல்ல முடியும்? நான் எங்கள் மாமா வீட்டுச் சாரட்டுக் குதிரையை அவிழ்த்துக்கொண்டு உங்களுடன் போட்டியிட்டு வெல்ல வந்துவிட்டேன்"

அரை மணி நேரம் மோப்பம் புறப்படுமிடம் தேடினோம். எங்கே சாத்தன் மோப்பமிடாமலே ஏமாற்றிவிட்டானோ என்று கேட்டான் சுடலை. ஆனால் "நான் பார்த்தேன், அவன் மோப்பமிட்டுக்கொண்டு வந்ததை" என்றான் மருதன்.

அதற்குள் காட்டான் மோப்பம் கண்டு வால் குழைத்துக்கொண்டு அதனைத் தொடர்ந்தது. மற்ற நாய்களும், அவற்றைப் பின்பற்றி நாங்களும் அதன்பின் சென்றோம்.

முதலில் சாத்தன் நன்றாகவே மோப்பமிட்டிருந்தான் என்று தோன்றிற்று. மோப்பத்தின் போக்கு மேட்டிலும் பள்ளத்திலும் ஊர்ப்புறத்திலும் தோட்டக் கரைகளிலுமாக எங்களை இட்டுச் சென்றது.

ஆனால் இறுதியில் மோப்பம் எதிர்பாராத இடத்தினுள் சென்றது. ஊரின் முதல் செல்வனாயினும் கொடியவன் என்றும் வல்லடி வழக்கன் என்றும் பெயரெடுத்த கோவிந்தராயன் ஊர்க்காட்டினுள் அது செல்லலாயிற்று.

"இப்படியும் செய்வானா?" என்று அனைவரும் மூக்கில் கையை வைத்தோம்.

ஆனால் இனி வேறு என்ன செய்வது? விளையாட்டை விட்டுவிட யாருக்கும் மனம் வரவில்லை. வேட்டை யார்வம் எல்லாரையும் மோப்பத்தின் பின் இழுத்துச் சென்றது.

ஊர்க்காட்டின் பனந்தோப்பையும் புன்செய்க்காட்டையும் தாண்டினோம். குதிரைகள் நன்செய் வரப்புகளைக்கூட சற்று அண்டிப் பின்னும் புன்செய்க் காடுகளிலேயே நுழைந்தன. எந்த நொடியில் கோவிந்தராயன் அல்லது அவன் ஆட்கள் யாரேனும் வந்துவிடுவரோ என்று எல்லாரும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு சென்றோம். செடிகளின்

ஒவ்வொரு சலசலப்பின் போதும், மனிதர் காலடி ஓசையின் போதும் "வந்தது தொல்லை" என்றே எண்ணி எண்ணிப் பதை பதைத்தோம். ஆனால் ஒவ்வொரு தடவையும் வந்தது வேற்றுளோ, அல்லது அங்கே பதுங்கியிருந்த பறவைகளோ முயல்களோ அன்றி வேறொன்றுமில்லை.

இறுதியில் "பிடி, பிடி" என்றொரு கூக்குரல். உண்மையிலேயே இத்தடவை தொல்லை வந்து விட்டது என்று கண்டு அக்குரலுக்கு நேர் எதிர்ப்புறமாகக் குதிரைகளைத் திருப்ப முயன்றோம். ஆனால் குதிரைகள் நாய்களையும் நாய்கள் மோப்பத்தினையும் பின் பற்றின. எங்கள் விருப்பம் செல்லவில்லை.

குரல்கள் ஒன்றிரண்டு பல்வாகப் பெருகின. பலர் திரண்டு எங்களைத் துரத்துகின்றனர் என்று கண்டோம். அவற்றினிடையே கோவிந்தராயன் முரட்டுக்குரல் 'விடாதே, பிடி, சல்லிப் பயல்கள், இப்பக்கம் இனி நாடாமல் காலை ஓடி' என்று வீறிடுவது கேட்டது. இனித் தலை பிழைப்பது தம்பிரான் புண்ணியமே என்று எண்ணினோம்.

குதிரைகளைப் பின்பற்ற முடியாமலோ என்னவோ குரல்கள் பின் தங்கிக் குறைந்தன. ஆனால் ஒரு சிலர் பிடி, பிடி என்ற குரலை மாற்றி நரி, நரி, நரியைப் பிடி என்றனர்.

நம்மைத்தான் நரி என்று இழித்து அவமதிப்பாகத் திட்டுகின்றனர் என்று முதலில் எண்ணினேம். ஆனால் எங்கள் நாய்கள் என்னவோ ஒரு நரியையே துரத்தி ஓடியது கண்டோம்.

சாத்தனது மோப்பத்தை விட்டு அங்கே பதுங்கியிருந்து ஓடிய நரியை நாய்கள் பின்பற்றி யிருக்கவேண்டும்!

பின்னுலுள்ள குரல்கள் அஞ்சவேண்டா! நரியைப் பிடியுங்கள், கொல்லுங்கள் என்றன. நாய்களின் மோப்பம் மாறியது போலவே எங்களைப் பின்பற்றியவர்களது வேட்டையும் மாறிவிட்டது. கோவிந்தராயன் குரல், இப்போது கனிவுடன், நரியைக் கொன்றவர்களுக்கு நாற்பது வெள்ளிகள். விரைவில் ஓடுங்கள், பிடியுங்கள் என்று கூவிற்று. எங்கள் பொய் வேட்டையின் ஆர்வமெல்லாம் உண்மை வேட்டையாக மாறிற்று.

அன்று நாங்கள் நரி முகத்தில் விழித்தோம். நரி யார் முகத்தில் விழித்ததோ! காட்டான் கடியினுல் அது பாதி உயிர் இழந்தது. மற்ற நாய்கள் சென்று அதன் குறை உயிர் தீர்த்தன. தலைவன் என்ற முறையில் மருதன் அதனைக் கோலால் தூக்கிக் கொண்டு கோவிந்தராயனிடம் சேர்த்தான்.

கோவிந்தராயன் கோழிப் பண்ணைக்கு நெடுநாள் எமனுயிருந்த நரி ஒழிந்தது. அவன் பண்ணையுள் நுழைந்ததனுல் ஏற்படும் தண்டனை பற்றிய எங்கள் அச்சமும் தீர்ந்தது. அதுமட்டுமன்று. எங்கள் கழகத்திற்கு அவன் உறுதியளித்த நாற்பது வெள்ளியும் எங்களுக்குப் பரிசாகத் தலைக்கு அரை வெள்ளியும் கிடைத்தன. ஆண்டு விழா விருந்தின் செலவையும் கோவிந்தராயனே ஏற்றதுடன் எங்கள் கழகத்தின் நன்கு மதிப்புத் தலைவனுகவும் கொடை வள்ளலாகவும் இருக்க ஏற்றுக்கொண்டான்.

எங்கள் கழகம் இப்போது உண்மையிலேயே ஊராரிடை மதிப்புப்பெற்று விளங்குகிறது. கோவிந்தராயன் பிள்ளை குப்பண்ணன்கூட அவன் பேர் போன 'கரடி' நாயுடன் அதில் உறுப்பினனுய்ச் சேர்ந்திருக்கிருன். சாத்தன் அதை எள்ளி நகையாடியதை மறந்து அதன் உறுப்பினனுனதுடன் அதற்காக உலைவிலாது உழைக்கும் உழைப்பாளியும் ஆய்விட்டான்.

இத்தனை "குருட்டு யோக"த்துக்கும் காரணம் ஒரு ஓரி தானே! அதனுல் தான் நரி முகத்தில் விழிக்க வேண்டும் என்று சொல்கிருர்கள் போலும்!!

பெண் என்ருல் பிழையா?

"சின்னி, சின்னி, அப்பாவுக்கு என்னை ஏன் பிடிக்கவில்லை? என்னிடம் என்ன பிழை" என்று கண்ணைக் கசக்கிக்கொண்டு அழுதாள் மரகதம்.

மரகதத்திற்கு ஆண்டு பத்தே ஆயிற்று. அவளுக்குத் தாயில்லை. சின்னம்மாவே அவளை வளர்த்து வந்தாள். செவிலித்தாயின் அன்பு தாய் அன்புக்கு ஈடாகுமா? ஆகவே அவள் தாயினிடம் காட்டவேண்டிய அன்பையும் தந்தையிடமே காட்டவேண்டியவள் ஆனுள்.

தந்தை தன்னிடம் பராமுகமாயிருப்பதைக் கண்டு அவள் மனம் கன்றிப்போயிற்று.

சின்னம்மை கண்களிலும் நீர் ததும்பிற்று. "ஐயோ பாவம்! தாயில்லாப் பிள்ளை. தந்தையும் இப்படி இவளைப் பாராட்டாமலிருந்தால் அவளுக்கு எப்படித்தான் இராது. பிள்ளை பெண்ணுயிருந்தால் என்ன கெட்டுப் போயிற்று. இதுகூட இல்லாமல் எத்தனையோ பேர் தவங் கிடக்கிருர்கள்" என்று அவள் தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள்.

சின்னம்மா! அப்பா அடுத்த வீட்டுப் பிள்ளைகளிடம் பேசுவதவ்வளவுகூட என்

னிடம் பேசமாட்டேன் என்கிருர்களே. நான் அவர்கள் பிள்ளையில்லையா!" என்று மீண்டும் மரகதம் கேட்டபோது சின்னம்மை மனம் இடிந்துவிடும்போ லிருந்தது. ஆனால் தன் மனத்துயரை வெளிக்காட்டாமல் அடக்கிக் கொண்டு "ஏனம்மா, நீ இப்படி எல்லாம் கவலைப்படுகிருய்! அப்பா உன்னைப் பாராட்டாமலில்லை. அவர்களுக்கு வேலை இப்போது மிகுதி. உன்னிடம் பேச ஓய்வு இல்லை. வேலை முடிந்த பிறகு உன்னுடன் விளையாடுவார்' என்ருள்.

"சின்னி அதெல்லாம் சொல்லி என்னை ஏமாற்றப் பார்க்காதே; எனக்குத் தெரியும் எல்லாம்.''

''உனக்கு என்ன தெரியும்" என்று கன்னத்தைக் கிள்ளிக்கொண்டு கேட்டாள் சின்னம்மாள்.

"ஏன் அவர்கள் மற்றப் பிள்ளைகளுடன் விளையாடும்போது கூட நான் போனால் விளையாட்டை நிறுத்திவிட்டுப் புத்தகத்தை எடுக்கிருர்கள் அல்லது வெளியே போய்விடுகிருர்கள். நான் பேசினால் கூட ஏதோ சாக்குப் போக்காக ஆம், இல்லை, சரி என்கிருர்கள். சில சமயங்களில் 'ஏன் என்னுடன் விளையாடமாட்டேன் என்கிறீர்கள்' என்ருல் கூடப் பராக்காக

'ஆம் ஆம்' என்கிருர்கள்" என்று தந்தையின் செய்கைகளை எல்லாம் விரித்துரைத்தாள் மரகதம்.

சின்னம்மைக்குக்கூட மரகதத்தின் தந்தையிடம் மனக்கசப்பு ஏற்பட்டுவிட்டது. சற்றே உணர்ச்சி வேகத்தில் தன்னை மறந்து "ஆம் அவருக்குப் பெண் என்ருல் பிடிக்காது தான! ஆணுயிருந்தால் இன்று அவருடன் வயலில் சென்று உழைத்து ஒத்தாசை செய்வாயல்லவா? அந்த அளவுக்குப் பெண் பிறந்ததால் உதவி குறைந்ததென்று நினைக்கிருர் போலும்" என்று குத்தலாகக் கூறினுள்.

ஆனல் கூறி வாய்மூடுமுன் தன் பிழையை உணர்ந்தாள். இதுகாறும் கன்றிப்போயிருந்த மரகதத்தின் முகம் சரேலென்று விளர்த்தது. சற்றுநேரம் வெறியார்ந்த மாதிரி இருந்துவிட்டுப் பிறகு ஏதோ நினைத்துக்கொண்டு "சரி, பார்க்கிறேன்" என்று அவள் தனது அறையுட் சென்று படுத்துக்கொண்டாள்.

"அவள் வருத்தம் தீரவிட்டுப்பேசுவோம்" என்ற எண்ணத்துடன் சின்னம்மாவும் தன் வேலையைப் பார்த்துச் சென்றுவிட்டாள்.

"இப்போது தெரிய வந்தது, அப்பா ஏன் என்னை வெறுக்கிருர்கள் என்று. அடுத்தவீட்டு வேலிடம் அவர்களுக்கு விருப்பம் மிகுதி. ஏன்?

அவன் அவனுடைய அப்பாவுடன் வயலுக்குப் போகிறான். அப்பாவுக்கு உணவு கொண்டு கொடுக்கிறான். என்னால் பயனென்ன தெய்வமே! என்னை ஏன் பெண்ணாகப் படைத்தாய்! சரி, எப்படியும் பெண்ணுருவத்தில் பெறமுடியாத அப்பா அன்பை ஆணுரு எடுத்தாவது பெறுவேன்" என்று அவள் மனத்தில் எண்ணமிடலானாள்.

ஆனால் ஆணுருவம் அடைவதெப்படி ?

வேலன் வீட்டிற்குச் சென்று அவன் களைந்து போட்டிருந்த குடுத்துணி ஒன்றையும் அரைத்துண்டு ஒன்றையும் எடுத்து வைத்துக் கொண்டாள்.

அன்று இரவு மரகதம் நன்றாய் உறங்கவேயில்லை. தனது உழைப்பு முறையைப் பற்றித் திட்டம் போட்டுக் கொண்டேயிருந்தாள்.

அவள் படுக்கை அறையின் பலகணி கிழக்கு நோக்கி இருந்தது. அதன் வழியாகக் காலை வெள்ளி மேலெழுந்தது தெரிந்ததும் அவள் எழுந்திருந்து உடை மாற்றினாள்.

அதோடு தந்தையின் பெட்டியிலிருந்த கத்தரியை எடுத்துக் கொண்டு வந்து கண்ணாடியின் முன் நின்றுகொண்டு தலை முடியைக் கட்டையாகக் கத்தரித்துப் பின்புற

மாகச் சிவிவிட்டாள். முகத்தில் மஞ்சள் கஊ நீங்கச் சவுக்காரம் தேய்த்துக் கழுவினுள். செங்கல் பொடியை முகத்திலும் உடலிலும் தேய்த்து உடலின் நிறத்தையும் மங்கவைத்துக் கொண்டாள்.

பொழுது விடிய ஒரு நாழிகை யாயிற்று. மரகதம் ஆணுடையுடன் தன் அறைக்கதவை ஓசையின்றிப் பொருந்தச் சார்த்தினுள். கொஞ்சத்தொலை பதுங்கிப்பதுங்கிச் சுற்று முற்றும் பார்த்துக்கொண்டு போனுள். அதன் பின் கொஞ்சத்தொலை ஓடி ஊர் எல்லை கடந்தாள்.

தனது நடை உடை தோற்றம் ஆணுருவுக் கொத்ததாயிருந்ததோ இல்லையோ என்று அவளுக்கு ஓயாத ஐயம். வழியில் யாரேனும் தன் பக்கமாகப் பார்த்தால் போதும். எங்கே தனது போலி உருவைக் கண்டுகொள்வார்களோ என்று அஞ்சுவாள்.

இதுகாறும் தான் எங்கே செல்வதென்ற உறுதி அவளுக்கு இல்லை. பாதை ஓரத்தில் ஒரு மர நிழலில் உட்கார்ந்து தான் மேற் செய்யத் தக்கது யாது என ஆராயலானுள். அயல் ஊராகிய வாகைக்குளத்தில் உள்ள செல்வராகிய சுந்தரேச முதலியாரைப்பற்றித் தந்தை அடிக்கடிப் பேசுவதுண்டு. அவரிடம் சென்று

பண்ணை வேலை கேட்பதென அவள் முடிவு செய்தாள்.

மரகதத்தின் ஊரிலிருந்து வாகைக்குளம் ஒரு நான்கு கல் தொலையேயிருக்கும். ஆனால் மரகதம் அவ்வழியே போய் அறியாதவள் சுற்றிச் சுற்றிப் பலதடவை வழி தவறிப்பின் கேட்டுப்போக வேண்டியிருந்தது. அதனால் அவ்வூர் போய்ச்சேர உச்சி வேளையாயிற்று.

சுந்தரேச முதலியார் பொருட் செல்வத்துடன் கல்விச் செல்வமும் அருட் செல்வமும் ஒருங்கே அமையப்பெற்றவர். தொலைவிலிருந்து பார்க்கும்போதே மரகதத்தின் நடையில் ஒரு புதுமையும் கவர்ச்சியும் இருந்ததை நோக்கினார். அண்மையில் வந்ததும் மரகதம் அவருக்கு வணக்கம் தந்து அவரது விருப்பமறியக் காத்துநின்றாள்.

சுந்தரேசர் சற்றுவியப்புடன் "நீ யார்? உன் பெயர் என்ன? உனக்கு என்ன வேண்டும்!" என்று கேட்டார்.

மரகதம் :—"ஐயா, நான் பக்கத்து ஊரில் உள்ளபையன். என் பெயர் மருதப்பன். எனக்கு ஒரு தாய் மட்டுமே உண்டு. அவள் வேலைசெய்து தான் நாங்களிருவரும் சாப்பிட வேண்டும். அவள் முதுமையால் உடல் தளர்ந்த நிலையிலிருப்பதால் நான் வேலை செய்வது உதவியா

யிருக்குமென்று நினைத்துப் புறப்பட்டேன். தங்கள் பண்ணையில் ஆள் வேண்டியிருக்கலாம் என்று கேள்விப்பட்டுத் தங்களைப் பார்க்க வந்தேன். எனக்கு வேலை கொடுத்தால் களிப் போடும் நன்றியறிதலுடனும் உழைப்பேன்'' என்றான்.

ஆண்டின் சிறுமையிலேயே இத்தனை நேர்மையும், மொழி ஒழுங்கும் இருப்பதுகண்டு உள்ளுக்குள் சுந்தரேசருக்கு மகிழ்ச்சி ஏற்பட் டது. ஆனால் பையனைப் பார்க்க வேலை செய்ப வனாகத் தோற்றவில்லை. உயர் குடியிலுள்ள பையன்களுக்குக் கூட இத்தனை மேன்மை இருப்பதில்லை. எதற்கும் ஒரு நாள் எப்படி வேலை செய்கிறான் என்று பார்ப்போம் என்று நினைத்துக்கொண்டு ''சரி, உனக்குத் தொழு வையும் அதிலுள்ள மாடுகளையும் பார்த்துக் கொள்ளும் வேலை தருகிறேன். நீ நெடுந்தொலை வெயிலில் நடந்து வந்ததாகத் தோற்றுகிறது. வீட்டம்மாவிடம் சென்று உணவு கேட்டு வாங் கிச் சாப்பிட்டுவிட்டு வா'' என்றார்.

வேலை பெறுவதிலேயே மனஞ் செலுத்தி யிருந்த மரகதத்திற்கு ஏற்பட்ட மகிழ்ச்சி சொல்லும் தரமன்று. முதலியாரின் மனைவி இதனைப் பார்த்துக் கொண்டே இருந்தவளான தால் உள்ளே சென்று சோறு வட்டித்தாள்.

மரகதத்திற்கு அன்று என்ன சாப்பிட்டோம் என்பதே தெரியாது. மனம் எல்லாம் செய்யப் போகும் வேலையில்.

மாடு கன்றுகளுக்கு அவள் புதியவளான தால் அவளுக்கு உதவி செய்யப் பழைய வேலைக் காரப் பையன் ஒருவனை ஏவிவிட்டு முதலி யார் தன் வயலைப் பார்க்கச் சென்றுவிட்டார். அந்த வேலைக்காரப் பையனுக்கு மரகதத்தைக் கண்டவுடன் தானே வெறுப்புத் தோன்றியது போலும். "நீ ஒரு மூ —— எங்கிருந்து வந்து சேர்ந்தாய்" என அவன் தன் திருவாயைத் திறந்து கேட்டான்.

"நான் வேலை செய்ய வந்திருக்கிறேன்" என்ருள் மரகதம்.

"வேலை செய்ய வந்திருக்கவளு நீ. ஒன்னெப் பார்த்தால் பொம்மைப் பிள்ளை மாதிரி இருக்கு. நீ என்ன செய்யப் போறே."

"நீ அப்படி நினைக்க வேண்டாம். ஒன்றிரண்டு நாளில் உன்னை யெல்லாம் போலவே வேலை செய்வேன்."

"என்னைப் போல வேலை செய்யத் தவசில்லா கிடக்கணும். நீ என்ன கத்துக்குட்டி, எங்கே பார்ப்போம். இந்த மாட்டைப் பிடிச்சுக்கோ," என்ருன் அவன்.

மரகதம் சூதறியாதவள். அவன் சொன்னபடி பிடித்துக் கொண்டாள். உடன், தானே அந்தப் பையன் ஒரு சாட்டையால் அம்மாட்டைக் குத்திக் கலைத்து, ஓடும்படி செய்தான். மரகதத்தால் அதைப் பிடித்துக் கொள்ள முடியவில்லை. ஆயினும் அவள் கயிற்றைக் கெட்டியாய்ப் பற்றிக் கொண்டாள். மாடு அவளைப் பல பக்கமும் இழுத்துச் சென்றது. கடைசியில் ஒரு தூணைக்கடந்து அஃது இழுத்துச் செல்கையில் அவள் அதனை அத்தூணில் கட்டிவிட்டாள்.

பின்னும் அந்த வேலைக்காரப் பையன் கன்றை மாட்டின் முன் கொண்டுவந்து கட்டிவிட்டு அது கண் காணும்படியாகக் கன்றைப் பிடித்துத் துன்புறுத்தத் தொடங்கினான்.

"அந்த வாயில்லா உயிர்களை ஏன் துன்புறுத்துகிறாய்" என்று கேட்டாள் மரகதம்.

"உனக்கென்ன அது. அது உனக்குக் கூடப்பிறந்ததோ என்று அதட்டிக் கொண்டு பின்னும் அக் கன்றைப் பலவகையில் துன்புறுத்தத் தொடங்கினான். வேலியிலுள்ள ஒரு முள்ளைக் கொண்டுவந்து அதன் கண்பக்கமும் மூக்குப் பக்கமும் குத்தினான். இதனைக் கண்டு தாய்ப்பசு கண் கலங்கிற்று.

மரகதம் எவ்வளவு சொல்லியும் முதலியார் பெயரைச் சொல்லி உறுக்கியும் அவன் முரட்டுத்தனமாக அவளையும் ஏளனமாகப் பேசத் தொடங்கினான்.

கடைசியில் அவன் பசுவின் நாவை யிழுத்துப் பிடித்துக் கொண்டு அதில் முள்ளைக்குத்தப் போனபோது அவளால் பொறுக்க முடியவில்லை. அவள் உருண்டு திரண்ட உடலுடைய முரட்டுப் பையன் என்பதைக் கூடப் பாராமல் அவன் செவி அடைக்கும் வண்ணம் ஓங்கி ஓர் அறை அறைந்தாள்.

அறையின் வேகத்தில் பையன் சற்றுப் பின்னடைந்தானாயினும் சற்று நேரத்தில் தன்னைச் சரிப்படுத்திக்கொண்டு கண் சிவக்க, உதடு துடிக்கச்சீறி அவள்மீது பாய்ந்தான். அவனது ஒரு பிடியில் அவள் தோள் பெயர்ந்து விடும்போ லிருந்தது. அவன் அவள் கால் விரலில் அழுத்திய அழுத்துக் காலை நிலத்தில் உறைத்துவிடும்போ லிருந்தது. அவன் அவள் முகத்தில் குத்திய குத்தால் அவள் மூளை கலங்கியது.

ஆனால் அவள் உடல் எவ்வளவு மென்மையோ உளம் அவ்வளவு வன்மை உடையது போலும்!

அவன் குத்திய குத்துத் தன்னைக் குத்தியதல்ல. பெண்மை மீது குத்திய குத்தென அவள் உணர்ந்தாள்.

இம் முரடன் போன்ற அறிவற்ற, உணர்ச்சியற்ற, சிறுமை மிக்க ஆண்களைக் கூடத் தந்தை விரும்பக்கூடும். தன்னை விரும்பார் என்ற எண்ணம் கையினுட் சென்று அதனை வைரம்போல் உறுதிப்படுத்திற்று.

அவள் அவன் நெஞ்சுப் பக்கமாக ஓங்கிக் குத்தினுள். என்ன அது! அவள் குத்திலா அவன் கீழே சாய்ந்து விழுந்தது! ஆனுல் அவளுக்கு அவன்மீதிருந்த சினம் அப்போதும் போனதாக இல்லை. எவனே ஒரு பையன் மீது எவளோ ஒரு மரகதத்தின் சினம் அல்லவே அது .அவள் கண்களில் ஏதோ ஒருவெறி. சீவிவிட்டிருந்த தலைமுடி நாலா பக்கமும் சிதறி அம் முரட்டுப் பையன் மனத்திற்கும் அச்சம் தந்தது. அவள் அவன் நெஞ்சின் மீது உட்கார்ந்து கொண்டு தான் விரும்பியபடியெல்லாம் அவனை உறுதி மொழி தரும் வண்ணம் வற்புறுத்தினுள்.

பாவம்! அப்பையன் அவளைப்பற்றி அதுவரை நினைத்ததெல்லாம் தவருய்ப் போயிற்று. 'நான் இனிப் பசுவை அடிக்க மாட்டேன். கன்றைத் துன்புறுத்த மாட்டேன். வாயில்லா

உயிர்களிடம் பரிவு காட்டுவேன்'' என்றெல்லாம் உறுதி மொழி கொடுத்தான்.

ஆனுல் இவ்வளவு சொல்லியும் நமது "குட்டிக்காளி"க்கு மன நிறைவு வரவில்லை. குடியின் தீமைகளை விளக்கும் நூல் ஒன்றில் குடியர்கள் மனைவி மக்களைத் துன்புறுத்துவர் என்று படம் போட்டுக் காட்டியிருப்பதை அவள் நினைத்துப்பார்த்து இவனும் அத்தகைய குடியர்களில் ஒருவனுக வளர்வான் என்று நினைக்கலானுள். நினைத்து, "இது போதாது; சிறு பிள்ளைகள் பெண்கள் இவர்களிடம் முரட்டுத்தனமாய் நடக்கமாட்டேன்" என்று ஆணையிடு. அப்போதுதான் உன்னை விடுவேன்'' என்ருள்.

அவன் அப்படியே உறுதி சொன்ன பின் அவனை விடுவித்து எழுந்தாள். அப்போது அவள் கண்முன் நின்றவர்கள் யார்? அவள் தந்தையும் சுந்தரேச முதலியாருமே.

தந்தை அவளை வாரி எடுத்து ''என் செல்வமே, உன்னை எங்கெல்லாம் தேடினேன். நீ ஏன் என்னைவிட்டு ஓடிவந்தாய் என்ருர்.

மரகதம் பேசவில்லை. ஏன்! தந்தையிடம் சீற்றமா! அல்லது சுந்தரேச முதலியார் என்ன சொல்வார் என்ற அச்சமா?

தன்னிடம் அச்சம் வேண்டாம் என்றும், அவள் போலி யுருவைத் தான் அறிந்து கொண்டதாகவும், தந்தையுடன் சொல்வது பற்றித் தடை ஒன்றும் இல்லை என்றும் சுந்தரேச முதலியார் சொல்லிவிட்டார்.

பின்னும் மரகதம் பேசவில்லை.

" சின்னம்மா எல்லாம் சொன்னாள். பிசகு என்பேரில் தான். ஆண்களை அடக்கி அவர்களுக்கு அறிவும் தரும் உன்னைப் போன்ற பெண்கள் பத்து ஆண்களுக்கு ஒப்பாவரே! இனி எனக்கு என்ன கவலை" என்றார் தந்தை.

மரகதத்தின் கண்ணிமைக்குள் அடைபட்டுக்கிடந்த கண்ணீர் ரத்தனையும் பீறிட்டுக் கொண்டு வெளி வந்தது. அவள் தந்தை கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதாள்.

இனிப் பத்து ஆண்கள் பிறந்தாலும் நான் இவ்வளவு மகிழ்ச்சியடையப் போகிறதில்லை. என்றார் தந்தை.

இனித் தாயில்லையே என்று நான் கவலைப் படப்போவதில்லை என்று நினைத்தாள் மரகதம்.
